**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 162/2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution: PW1
Defendant :
Court :

Name : போஸ்
Father's/
Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

13.03.2026. **CC.No. 162/2022** அ.சா.1 போஸ்

(1, 2 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் ஆவரங்காட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வந்தேன். புகார்தாரர் சாட்சி குணசுந்தரி என்பவரைத் தெரியாது. ஆஜர் 1, 2 எதிரிகளை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் சாட்சி குணசுந்தரி என்பவரது குடும்பத்திற்கும் ஆவாரங்காட்டில் உள்ள இருளப்பன் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமான பிரச்சனை இருந்தது என்றும் இந்நிலையில் கடந்த 26.09.2021 ம் தேதியன்று ஆஜர் எதிரிகள் மேற்படி பிரச்சனைக்குரிய இடத்தில் கருவேல மரங்களை வெட்டினார்கள் என்றும் அதை புகார்தாரர் சாட்சியும் அவரது கணவர் சாட்சி 2 பாக்கியம்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.13 17:46:42 +0530

ஆகியோர்கள் எதிரிகளிடம் கேட்டதற்கு அவர்களை அசிங்கமாக ஆஜர் எதிரிகள் பேசினார்கள் என்றும் அதே நாள் மதியம் 03.30 மணியளவில் புகார்தாரர் சாட்சி அவரது வீட்டில் தனியாக இருந்தபோது எதிரிகள் இரண்டு பேரும் புகார்தாரர் சாட்சியின் வீட்டிற்கு வந்து கம்பியால் மேற்படி வீட்டின் ஓட்டை உடைத்து சொத்து அழிப்பு செய்தார்கள் என்றும் குணசுந்தரியை அசிங்கமாக பேசி அவரை பெண் என்றும் பாராமல் வன் கொடுமை செய்தார்கள் என்றும் 2 எதிரிகளும் சேர்ந்து கம்பியால் குணசுந்தரியின் தலையில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் மேற்படி சண்டையில் குணசுந்தரியின் தாலியிலிருந்த மாங்கல்யம் காணமல்போய் உள்ளது என எனது போலீசார் விசாரணையில் சொல்லியுள்ள உண்மை சங்கதிகளுக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.13 17:46:48 +0530